# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

## OS.40/2020

**Deposition of Witness : PW- 1**

**Name** : முருகன்

**Father Name** : சுப்பிரமணிரெட்டி

**Religion** : இந்து

**Caste** : -

**Calling** : -

**Address** : பாடி கிராமம் நெமிலி வட்டம்.

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 20.07.2023.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-

1.வழக்கு சொத்தில் கடைசியாக என்ன பயிர் செய்தோம் என்றால் கேழ்வரகு பயிர் செய்தேன் 40 வருடம் இருக்கும். அதன் பிறகு முள் புதராக உள்ளது. மரங்களை யார் வெட்டியது என்றால் நான் தான் வெட்டினேன். பட்டா மாறுதல் சம்மந்தமாக ஆர்.டி.ஓவிடம் எப்போது மனு கொடுத்தேன் என்றால் 3 வருடம் இருக்கும். அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆர்.டி.ஓவிடம் மனு கொடுத்த விவரத்தை வேண்டுமென்றே தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வழக்கு எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 3 வருடம் ஆகும். ஆர்.டி.ஓ 30.07.2021ல் உத்திரவை போட்டுள்ளார் என்றாலும் அதற்கு முன்பாகவே நான் 01.10.2020ல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆர்.டி.ஓ உத்திரவை பற்றி தெரியாது.

2. ஆர்.டி.ஓவிடம் மனுவை கொடுத்த விட்டு காவல் நிலையத்தில் மனு கொடுத்து பிறகு வழக்கை தாக்கல் செய்தேன். டிசம்பர் 2019ல் தான் பட்டா மாறிய விவரம் தெரியும்

என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆம் என் தந்தை இறந்த பிறகு தான் பார்த்தோம். பட்டா மாறியது குறித்து 21.06.2019 அன்றே மாவட்ட வருவாய் ஆய்வாளரிடம் மனுவை கொடுத்துள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. எங்கள் இடத்தில் வந்து பிரச்சினை செய்த பிறகு தான் ஆர்.டி.ஓவிடம் மனுவை கொடுத்தேன். வழக்கு சம்மந்தப்பட்ட பரிகாரம் ஆர்.டி.ஓவிடம் முடிந்து இருக்கும் என்றாலும் அவரது அனுபவத்தை தடுப்பதற்காக தான் இந்த வழக்கை பொய்யான தகவல்களுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்து விவரம் எனக்கு தெரியவில்லை என்றாலும், வருவாய் ஆவணங்கள் என் பெயரில் இல்லை என்றாலும், சொத்து என் அனுபவத்தில் இல்லை என்றாலும், என் தந்தை முழு உரிமையாளரிடமிருந்து கிரையம் பெறவில்லை என்றாலும், பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.